இந்த குவாரி இன்னைக்கு நேத்து நடக்கலை. கிட்டதட்ட 25 வருடங்களாக இருக்கிறது. இந்த குவாரிகளினால் பிரச்சனைகள் என்னவென்றால் கொஞ்சம் விதிமுறைகளுக்கு உட்பட்டு வேட்டு வெடிக்கரதை கம்மியாக வைத்தால் நல்லா இருக்கும், இப்பொழுது கொஞ்சம் அதிகமாகத்தான் வேட்டு வெடிப்பது இருக்கிறது. இன்னும் கொஞ்சம் கம்மியா வேட்டுவச்சி வெடிச்சா நல்லா இருக்கும். மத்தபடி புகைக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதற்கு தகுந்தபடி, விதிமுறைக்கு தகுந்த மாதிரி பண்ணினார்கள் என்றால் பிரச்சனை இல்லை. மத்தபடி சினரேஜ் அந்த கிராமத்துக்கு கரெக்ட்டா வழங்கனும், நீங்க குடுத்த Permit-ஐ excess பண்றாங்க, அத நீங்க கடைபிடிச்சா நன்றாக இருக்கும் மத்தபடி எங்க கிராமத்துக்கு வரனும் நல்லதுதான். ஆனால் விதிமுறைக்கு உட்பட்டு செயல்படனும். எக்கச்சக்கமாக எடுக்கறாங்களானு இதையெல்லாம் பார்த்து விதிமுறைகளுக்கு உட்பட்டு எடுக்கறாங்களானு நீங்க பாலோ பண்ணனும் மத்தபடி பிரச்சனை இல்லை.

4. திரு. சண்முகம், பொட்டணம் 5000 ஓட்டு கவுன்சிலர்.

நண்பர் இளையரசு சொல்லியதை போல கிட்டதட்ட 25 ஆண்டுகள் குவாரியினுடைய வருமானம் இல்லை என்றால், பொட்டணம் பஞ்சாயத்தில் கரண்டுக்கு பணம் கட்டுவதக்குக் கூட வழியில்லை. இது தான் உண்மை

யாருடைய தனிப்பட்ட நபரின் சுயநலத்திற்காக சில பேரை தூண்டிவிட்டு செய்யக்கூடிய வேலை, இந்த குவாரிகளால் எந்தவொரு பிரச்சனைகளும் இல்லை என்று சொல்வதற்கும் இல்லை. அந்த குறைகளை இளையரசன் சொல்லியதை போல உங்களால் முடிந்த அளவிற்கு மாசு கட்டுப்பாட்டு வாரிய அறிவுரைப்படி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு முறையாக செயல்படுத்த வேண்டும். இந்த 25 ஆண்டு காலத்தில் இதற்கு முன் 15 ஆண்டு கால நிதி அரசாங்கத்திற்கு சென்றுவிட்டது. கடந்த 10 ஆண்டுகளாகத்தான் பஞ்சாயத்திற்கு நேரடியாக கிடைக்கிறது. அந்த நிதியை வைத்துதான் சாலை பணி, இதர வசதிகள் செய்யப்படுகின்றன. சிறு, சிறு தவறுகள் நடக்கலாம், அந்த குறைகளை சரிசெய்து இயங்க வேண்டும். இந்த குவாரிகள் இருந்தால் மென்மேலும் வளர்ச்சி அடையும் என்று கூறினார்.

5. திரு. சின்னதுரை அவர்கள், லாரி டிரைவர்

நான் ஒரு லாரி டிரைவர். என் குடும்பம் வடக்கு தோட்டம் பொட்டணம் கிராமத்தில் இருக்கு, இவங்க என்னுடைய பிள்ளைகள். ஒவ்வொரு வாட்டியும் வெடி வைக்கும் போது என் வீடு பக்கத்துல் இருப்பதால் அதிகப்படியான புகை வருகிறது. அதனை போட்டோ எடுத்து வைத்துள்ளேன், குடி இருக்கவே முடியவில்லை. நாங்களும் எத்தனையோ தடவ சொல்லி பார்த்துட்டோம் அவங்க கேட்கவே மாட்டேங்கிராங்க, நாங்க எது சொன்னாலும் எதிர்ப்பு தெரிவிக்கராங்க, நான் இந்த பிள்ளைகளை கூட்டிட்டு இந்த இடத்துலேயே மண்ணெண்ணெய் ஊத்திகிட்டு செத்துவிடுவோம். கம்முன்னு இந்த குவாரியை நிறுத்திருங்க.

6. திருமதி. சின்னதுரை

மேடம், அவங்கவங்க ரீசனை அவங்கவங்க சொல்றாங்க, அவங்க சம்பாதிக்கறதுக்கு அவங்க சொல்றாங்க. நான் சொல்றது 100% சதவீதம் உண்மை, வேட்டு வச்சா புகையால் நூற்றுக்கு நூறு விவசாயம் பாதிக்கிறது. விவசாய காட்டுக்குள் கல்லு வந்து விழுகிறது. புகை வந்து படியுது, இதனால்

மூச்சு திணறல் அதிகம் ஏற்படுகிறது. எனது பையனுக்கு 5 வயது, மேடம் நாளைக்கு நீங்க டெண்டர்விட்டு அதிகம் பாதிப்பு ஏற்பட்டதுனா இவங்க சொல்றாங்களே மாசு ஏற்படாதுன்னு. நாளைக்கே என் குழந்தைக்கு மூச்சு திணறல் ஏற்பட்டுச்சுனா நீங்க என்ன மேடம் பதில் சொல்லுவீங்க என்று கேட்டார். இவங்க சொல்றாங்க மாசு எந்த பாதிப்பும் ஏற்படாதுன்னு ஆனால் வேலை செய்யும் போது பக்கத்துல இருந்தா, பாக்குறாங்க நாங்க என்ன அனுபவிக்கிறோம் என்று, என்ன கஷ்டப்படுகிறோம் என்று எங்களுக்குத்தான் மேடம் தெரியும், ஒரு தண்ணி குடிக்க முடியல, சாப்பிட முடியல, ஆடு, மாடு நிம்மதியா தண்ணி குடிக்க முடியல. அவ்ளோ புகை, மேடம். 20 பேருக்கு மேல பக்கத்துல இருந்து வந்துருக்காங்க அவங்க ரீசன் அவங்கவங்க சொல்றாங்க, நாங்க யார் தூண்டிவிட்டும் பேசல, எங்க வீட்டுல நடந்ததை உண்மையை சொல்றோம், வெளியில சாப்பாடு ஆக்க முடியல.

7. திரு. சின்னதுரை மகள் சி. கௌசிகா.

நான் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் படிக்கிறேன். கரட்டுல வந்து வேட்டு வேகமாக வெடிக்கிறாங்க, புகை நிறையா வருது, சாப்பிட முடியல, தண்ணி கூட குடிக்க முடியல, அதிகம் படிக்க முடியல, படிப்பில் அதிக இன்டரஸ்ட் காட்ட முடியல.

8. திருமதி. சின்னதுரை

முந்தாநேத்து வேட்டு வெச்சாங்க மேடம், பாத்திரம் கீழ விழுந்து இருந்துச்சு, தம்பி தள்ளிவிட்டுட்டான்னு பொன்னுகிட்ட கேட்டேன். தம்பி தள்ளி விடலமா வேட்டு வச்சி பாத்திரம் கீழ விழுந்திருச்சின்னு, சொன்னா மேடம் நாங்க நம்பல, திரும்ப சின்ன கிண்ணம் வந்து விழுந்துச்சி அவ்ளோ அதிர்வு ஏற்படுது மேடம், முந்தாநேத்து வேட்டு வெச்சதுல அந்த அளவு அதிர்வு மேடம். இது குறித்து பலமுறை மனு கொடுத்தும் பயனில்லை. எனவே, மாவட்ட ஆட்சியர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

9. திரு. தங்கவேல் அவர்கள், சாலையூர், பொட்டணம்.

எனது தோட்டம் குவாரியின் பக்கத்திலேயே இருக்கு 25 வருசமா குவாரி நல்லபடியா நடந்துகிட்டு இருக்கு. சிறு சிறு தவறுகள் இருந்தாலும் சரிபண்ணிகிறாங்க, இரண்டு முறை தினமும் தண்ணிவிட்டு தூசியை பக்கத்து காட்டுக்கு வராம செய்றாங்க இதனால ஆட்சேபனை இல்லை, அதனால குவாரிக்கு பக்கத்துல முள்வேலி போட்டு நல்லா பாதுகாப்பா ரோட்டுல போர, வர்வங்களுக்கு எந்த இடஞ்சலும் இல்லாம செஞ்சியிறுக்காங்க. வேட்டு வெச்சாலும் கம்மியா மருந்து போட்டு எங்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லாம வைக்கறாங்க. இந்த குவாரியினால நிறைய வேலை வாய்ப்பு குடுக்கறாங்க. எங்களது சின்ன கிராமம் நம்ம எது சொன்னாலும் சீர்திருத்தம் பண்ணிக்கிறாங்க. அதனால இந்த குவாரிக்கு லைசன்ஸ் குடுக்கிறதனால எந்த ஆட்சேபனையும் இல்லை, நீட்டா செஞ்சி குடுங்க.

10. திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், எட்டிமட தோட்டம், சாலையூர்.

சின்ன சின்ன தவறுகள் நடந்தாலும், சரிபண்ணி குடுத்தர்றாங்க, எந்த பிரச்சனையும் இல்லை அவங்களுக்கு அனுமதி கொடுக்கலாம்.

11. திரு. வரதராஜ் அவர்கள், நாமக்கல்

எனது பெயர் வரதராஜூ முதல் குவாரியினுடைய புரபனன்ட். குவாரி நடத்துறத பத்தி சின்னதுரையும் அவரது குடும்பமும் வந்து பேசுனாங்க. என்னுடைய தோட்டம் குவாரியை சுற்றி இருக்கு கிட்ட தட்ட 2500 மரங்கள் வைத்து பெரிய மரமாயிருக்கு அந்த குடும்பம் ஸ்பெசிபிக்கா வந்து அராஜகம் பண்ணுரதுக்கு காரணம் பணம், திரும்ப திரும்ப எங்கிட்ட வந்து ரூ.5,00,000/– பணம் குடுங்க அப்படினாங்க. நா குவாரியை, வேணா நீ உடைச்சிக்க அப்படின்னு நான் சூழ்நிலைய சொன்னா, பிற்பாடு அவங்களுடைய ஆடு, மாடு அனைத்தும் இன்னும் என் தோட்டத்துல தான் மேஞ்சிகிட்டு இருக்கிறது. நான் மரம் வெச்சிருக்கேன், தேக்கு, வேம்பு, புளியமரம் எல்லாம் 9 ஏக்கருல இருக்கு,

இன்னும் அவங்க ஆடு, மாடுங்க என் தோட்டத்துலதான் மேஞ்சிகிட்டு இருக்கு, அங்க விவசாயம் பூரா மானாவாரி, அங்க மழை பேஞ்சா, கம்பு, சோளம் ஏதாவது விளைவிக்கலாம். வேற எந்த விவசாயமும் பண்ண வாய்ப்பு கிடையாது. இந்த சூழ்நிலையில் குவாரியை சுத்தி 10 பேர் இருக்காங்க. கோவிந்தன், காளியப்பன், சாக்ரடீஸ், இந்த மாதிரி 10, 15 பேர் இருக்காங்க அவங்க யாருக்கும் இல்லாத பாதிப்பு, இவங்களுக்கு மட்டும் தனியா இருக்கும். வேட்டு வைக்கும் போது மருந்து கம்மியா போட்டு சரியாதாவைக்கறாங்க. சத்தம் வந்தா நானே குவாரியை குலோஸ் பன்னுங்கன்னு சொல்லியிருக்கேன். இந்த சூழ்நிலையில் பணத்துக்காக ஒரு தவறான குற்றசாட்டினை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் வைப்பது தவறு என்பது எனது தாழ்மையான கருத்து. அந்த பகுதியில் கிணற்றுல தண்ணி இன்னும் மேலதான் இருக்கு, என்னுடைய போர்லியே 60 அடியில தண்ணி இருக்கு, தண்ணி குறையல அவங்க வீட்ட கட்டியிருக்கிறது பாறை புறம்போக்கு எங்கள வந்து Force பண்ணி குவாரிய குலோஸ் பண்னுங்கனு சொல்றது எந்த விதத்திலும் நாயம் இல்லை. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உண்மை நிலை அறிந்து அதற்கு தகுந்தவாறு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்ந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

12. திரு. பெரியசாமி அவர்கள், பொட்டணம் (வடக்கு தோட்டம்,)

இந்த பக்கம் வெடி வைக்கிறது, சாலையூர் பக்கம் எங்களால் தாங்க முடியல, வெடி வெச்ச 5 நிமிடம் புகை மண்டலமா போயிட்டு இருக்கு, வீடு அதிர்கிறது, ஒரு 3 மாசம் கழிச்சி பார்த்தா இந்த மணல் வந்து விழுவுறதால விவசாய நிலமே வெள்ளை வெள்ளையா ஆகிறது. உழவு ஓட்ட முடியாது, பயிர் சரியா வராது, ஆடு, மாடு தண்ணி குடிக்க முடியாது. இது தூரத்திலிருக்கும் போதே, இன்னும் அருகாமையில வந்து வெடி வச்சாங்கனா எங்களால் குடியே இருக்க முடியாது. சார் சொன்னாங்க தண்ணி தெளிப்பாங்க புகை வராதுனு. ஆனால் இந்த மண்ணு செடி, கொடி மேல படிஞ்சு காத்து அடிச்சாக்க லேசா

காத்தடிச்சா கூட இந்த மணல் துளிகள் எல்லாமே மனுசன் வீட்டுக்குள்ளதான் வந்து விழுது. ஆடு, மாடு தண்ணி குடிக்க முடியல, லாரி லோடு ஏத்திட்டு வரும்போது கிடுகிடுன்னு சவுண்டு வருது. ஒரே சவுண்டா இருக்கும், தண்ணி தெளிச்சி ஈரப்பதம் பண்ணுவோன்னு சொல்றாங்க, ஈரப்பதம் எவ்வளவு நேரம் இருக்கும் அதுக்கு அப்புறம் ஒனந்து (உலர்ந்து) போயிடும். மணல் எல்லாம் காத்துல பரவத்தான் செய்யும். இதுக்கு என்ன வழி, இந்த வெடி வெடிக்கரதால கிணத்துக்கு வர தண்ணி (ஊத்து) பாதிக்குது. 10 வெடி ஒன்னா போட்டு குபீர்னு வெடிக்கறாங்க கரடே அதிர்ந்து போற மாதிரி இருக்கும், இதுக்கெல்லாம் என்ன செய்யுறது. பக்கத்துல குடி இருக்க முடியல மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கல் உடைப்பதற்கோ, குத்தகைவிடுவதற்கோ மறு ஆய்வு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

13. திரு. சண்முகம் அவர்கள், பொட்டணம் (வடக்கு தோட்டம்).

இப்ப அக்ரி சொன்னாப்புள மரமட்டை வச்சியிருக்கும், அப்படி இருக்கறப்ப என் வீட்டுல புகை வருது வெடி வச்சு கல்லுவந்து விழுந்து 7 ஓடு உடைஞ்சியிருக்கு, இரண்டு வருஷம் ஆகுது, ஓடு இல்ல படுதா வெச்சி கட்டி இருக்கிறேன். அதேமாதிரி 20 ஆடுகள் செத்து போச்சி, காசு தரேனு சொன்னாப்பள இன்னும் தரமாட்டேங்கறாப்பள, எப்படி சோறு திங்கறது.

14. திரு. பெரியசாமி அவர்கள், தண்டிகரடு மேற்கு (தனியார் பள்ளி ஆசிரியர்).

என்னுடைய வீடு வந்து தண்டிகரடுக்கு மேற்கு பக்கம் ரோட்டு ஓரமா இருக்கு, இப்பத்தான் ஒரு 50 இலட்சம் ரூபாய் போட்டு வீடுகட்டி இருக்கிறோம். கடனை வாங்கி வீடு கட்டி இருக்கிறோம், தண்டி கரடுல பெரிய வேட்டு வெடிக்கரதால சுவர் எல்லாம் கீரல் விடும்பொழுது இந்த வீடு ஒரு கட்டத்துல விழுந்துறுமோன்னு இருக்கு. அது வேட்டு வெடிக்கும் போது பெரிய புகைமண்டலமா வந்து வெளிய நிற்க முடியல, வீட்டுக்குள்ள ஓடி போயிடுவோம்.

வெடிபொருள் மூக்கில் ஏறும் போது மயக்கமே வந்துரும் போல இருக்கு. நாங்களே உள்ள ஒழிஞ்சிக்கிறோம், இந்த ஆடு, மாடு எல்லாம் என்ன பண்ணும். அங்குள்ள மரம், செடி, கொடி மேல எல்லாம் வெள்ளையா படிஞ்சு, அந்த தீனிகளை மாடுகளுக்கு போடும் போது வயிற்று போக்கு ஏற்படுகிறது. இப்படி எல்லாம் பிரச்சனை இருக்கு, அது இல்லாம கரட வெட்டும் பொழுது மாசு அதிகமாகுது, தண்ணியோட அளவே குறைஞ்சிருது. இவங்க சொல்றாங்க தண்ணி வளம் இருக்குதுனு, ஆன அது எல்லாம் பொய், தண்ணியே கிணத்துல கால் கிணறுதான் இருக்குது. எல்லா இடத்துலையும் வெள்ளம் போகுதுங்கறாங்க, இங்க தண்ணி இல்ல, எந்த வெள்ளாமையும் எடுக்க முடியல, பெரிய கஷ்டமா இருக்கு, அது இல்லாம கிரஷர் போட்டு இருக்காங்க, விடிய விடிய ஓட்டுறாங்க வெளிய படுத்தா அப்படியே காத அடச்சி பெரிய தலைவலியா இருக்கு ஸ்கூலுக்கு போனா அங்கயும் தலைவலியாகுது இதுக்கு ஒரு விடிவு நீங்கதான் பண்ணனும்.

15. திரு. சண்முகம் அவர்கள் (Continue)

நீங்க வேணும்னா நேரடியா என்னுடைய வீட்ட வந்து பார்க்கலாம், என்னுடைய வீட்டுல புகையடிச்சது, ஓடு ஒடைஞ்சதெல்லாம் ஆடு செத்தது எல்லாம் நான் பொய் சொல்லலை.

16. திருமதி சின்னதுரை அவர்கள் (Continue)

வரதராஜூ அவங்க சொன்னாங்க நாங்க 10 வீடு இருக்கு அவங்களா எதிர்ப்பு தெரிவிக்கல அப்படினு அவங்க எல்லாம் கிரசர்ல வேலை செய்றாங்க அவங்க என்ன குடுத்தாங்கனு எனக்கு தெரியாது. எங்களுக்கு பாதிப்பு அதிகமாக இருக்கிறது. அவங்கலாம் கல்குவாரியில் வேலை செய்றாங்க அவங்க எதிர்ப்பு தெரிவிக்க மாட்டாங்க, அவங்க சொன்னாங்க ஆடு, மாடு மேய்துன்னு வந்து பாருங்க வேலி எப்படி போட்டு இருக்காங்கன்னு. ஆடு, மாடு எல்லாம்

வெள்ளாமையிலவிடமாட்டாங்க இதுக்கு நீங்கதான் தாழ்மையுடன் பதில் சொல்லனும் மேடம்.

17. திரு. விஜய்குமார் அவர்கள், தண்டி கரடு .

பெட்ரோல் பங்க் பக்கத்தில் இருக்கிறோம். வேட்டு வைத்தால் நில அதிர்வு ஏற்பட்டு, கல்லு பக்கத்துல வந்து விழுது, ஏற்கனவே எல்லாரும் பாதிச்சிருக்காங்க, எல்லாம் உங்களுக்கு தெரியும் அதுமட்டுமல்லாமல் புகை அதிகமாக வருது. நாங்கயெல்லாம் விவசாயம் செய்ரவங்கதான், காட்டுல இருக்குற செடி, கொடி எங்களுக்கும் ஆஸ்துமா வந்துருமோன்னுயிருக்கு. நார்மலா டிராபிக்லயே அவ்ளோ புகை, அதுவே இங்க அவ்வளவு புகை ஆஸ்துமா வரும். அதுமட்டுமல்ல அங்க சுடுகாடு இருக்கு எங்களுக்கு பெரியகாரியமுனா அங்கதான் போவோம், அப்படி போதும்போது எங்களுக்கு பயமா இருக்கும்ல. நல்லா வெடி வெடிக்குறாங்கா மழை பெய்தால தண்ணி போற இடம், பெரிய குழியாவே ஆயிருச்சு. இது நால எங்க வாழ்வாதாரமே பாதிக்கப்படுகிறது. நிறையபேர் வராங்க, நாங்க சொல்லுறது பொய்னா நீங்களே நேர்ல வந்து பாருங்க, எங்க பிரச்சனை உங்களுக்கு தெரியும். இது நாள, யார் சொல்றது உண்மை, பொய்யினு உங்களுக்கு தெரியும், பார்த்துட்டு நீங்க ஆக்ஷன் எடுங்க.

18. திரு. செல்வகுமார் மனைவி, சாலையூர் (சுமதி)

நாங்க விவசாய குடும்பந்தாங்க ஆடு, மாடு மேய்க்கறதுதாங்க எங்க தொழில், சின்ன சின்ன பிள்ளைங்க கதவுல கை வெச்சா கூட தூசிதாங்க வருது, அப்படியே தொட்டு வாய்ல வைக்கறாங்க, மூக்குல வைக்கறாங்க எல்லாம் சுத்தமா வச்சுக்கினுங்கறாங்க, எங்க குழந்தைங்கல நாங்க எப்படி வளர்க்கிறது. எங்களால அங்க குடியே இருக்க முடியாது. நீங்க வேணா ஒருவாரம் அங்க வந்து இருந்து பாருங்க, வேட்டு எப்படி அதிருதுன்னு, வீடு எப்படி அதிருதுன்னு. நாங்களும் வீடு பலமாகதான் கட்டியிருக்கிறோம். மேலிருந்து குண்டா கீழ

விழுதுங்க, புள்ளைங்க அங்க வச்சிகிட்டு நாங்க எப்படிங்க அங்க இருக்கறதுங்க, நீங்களும், வாங்க புள்ளைங்களோட அங்க வந்து இருந்து பாருங்க அப்போதான் அங்க எவ்வளவு அதிர்வு இருக்குனு உங்களுக்கு தெரியும். காசு வருது, பணம் வருதங்கறாங்க அவங்க பணம் வாங்கிட்டு வீட்டுல இருக்காங்க. நாங்க விவசாய காரங்க எப்படி இருக்கறதுங்க, எப்படி நாங்க பிள்ளைகளை வளர்க்கிறது. சின்ன சின்ன பிள்ளைங்கயெல்லாம் இருக்கறாங்க, மழை வருது இத செஞ்சேன், அத செங்சேங்கிறாங்க, எத செஞ்சாங்க? அதனால விடக்கூடாது, அதனால எங்களுக்கு கல்குவாரி தேவையில்லை, அதனால எல்லாரும் நல்லா இருக்கனுங்க, நீங்க பார்த்து சொல்லுங்க.

19. பெரியசாமி அவர்கள் (Continue)

பொட்டணம் கிராமத்தில் நிறைய வேலைவாய்ப்பு கிடைக்கும்னு சொன்னாங்க, பொட்டணம் கிராமத்தில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைச்சியிருக்கு, இது எல்லாம் பொய்.

20. திருமதி. செல்வி அவர்கள், சாலையூர்

எங்க வீடு கிரஷர் ஒட்டி இருக்குங்க. எங்க, பொழியும் கிரஷர் ஒட்டி இருக்கு, புழுதி ஓவரா வருது எங்களாள குடியிருக்கவே முடியல, ஆடு, மாடு கட்டினாகூட கல்லு முன்னாடியே வந்து விழுது, நாங்களும், எவ்வளவோ ஸ்டெப் எடுத்து பார்த்தோம். அவங்க எதையுமே கண்டுக்கலை, கேட்டா நாங்க சொல்றோம், சொல்றோம் ஆன எந்த ஸ்டெப்பும் எடுக்க மாட்டேங்கிறாங்க, நீங்க இதுக்கு வந்து ஹெல்ப் பண்ணனும், எதா இருந்தாலும் எங்க வீட்ட வந்து பாருங்க, ஆறு மாச குழந்தைய வச்சிகிட்டு இருக்கவே முடியல புகையா அடிக்கிறது. நைட்ல எங்க வீடே தெரியமாட்டேங்குது, அவ்ளோ புகையா இருக்கு, மாடு மேய்ச்சிட்டு போனா கல்லு வந்து பக்கத்துலேயே விழுது. எந்த டைம் வெக்கறாங்கன்னே சொல்லவே மாட்டேங்கிறாங்க, இதற்கு முயற்சி பண்ணி ஸ்டெப் எடுக்கனும்.

21. திருமதி சாந்தி அவர்கள், பொட்டணம் வடக்கு தோட்டம்

வெடிவைக்கறாங்க, எங்களால இருக்க முடியல, ஆடு, மாடு வச்சியிருக்கோம், விவசாயம்தான் பண்றோம் எத்தனையோ தடவ சொல்லி பார்த்துட்டோம் வெடி வைக்கிற தால புகை ரொம்ப கிளம்புது, அதனால நீங்கதா வந்து பார்க்கனும், எங்கவீடு இப்பதா கட்டினோம், விரிசல் விட்டிருக்கு, நீங்க கூட வந்து பாருங்க.

22.திரு. சாக்கரட்டீஸ் அவர்கள், பொட்டணம்

கல்குவாரிக்கும், என் வீட்டிற்கும் ஒன்னும் இல்லைங்க பஞ்சாயத்து ரோடுதான் குறுக்க, மானாவாரி வெள்ளாமைதான், கிணறு மேட்டு கிணறு, வந்து பார்த்திங்கனா கூட அரை கிணறு தண்ணி இருக்கு, வேட்டு வைக்கிறத நாளையோ, இது நாளையோ எந்த வித பிரச்சனையும் இல்லை. எனக்கு 4 வயசுல ஒரு பொண்ணு இருக்கு 7 வயசுல ஒரு பொண்ணு இருக்கு, இதுனால எந்த பிரச்சனையும் இல்லை, இதுவந்து 1978–ல் ஓட்டுவீடு கட்டினோம். அந்த ஓட்டுவீட்டுல வந்து பாருங்க ஒரு விரிசலும் இல்லைங்க. இந்த நிலைமைதான் உண்மை, நான் தொழில் செய்றேன், என் மூலமா 10 பேர் தொழில் செய்றாங்க, அவங்க குடும்பமும் நல்லாதான் இருக்கு, ஆஸ்துமா வந்துரும், அது வந்துருங்கறாங்க, 25–30 வருசமா இருக்கிறேன். நான் சின்னபையனுல இருந்து பாறை உடைச்சிட்டுதான் இருக்கிறேன். இதனால எங்க குடும்பத்துக்கோ, குழந்தைகளுக்கோ, ஆடு, மாடுகளுக்கோ எந்த பிரச்சனையும் இல்லை.

23.திரு. செந்தில்குமார் அவர்கள், (வழங்கறிஞர்), நாமக்கல்.

நான் ஒரு வழக்கறிஞர் மற்றும் இந்திய சுதந்திர போராட்ட தியாகியின் பேரன், நாமக்கல்லில் இருந்து வந்திருக்கிறேன். இன்றைக்கு சாதாரண கற்கள் சுரங்கம், சர்வே எண். 176, பொட்டணம் கிராமத்தில் அமைந்துள்ள புலபரப்பிலே, ஏற்கனவே 6 சுரங்கங்கள் இயங்கி வருகின்றன. தற்போது கூடுதலாக இரண்டு சுரங்கங்களுக்கு அனுமதி கோரி, மாநில சுற்றுச் சூழல் மதிப்பீட்டு

ஆணையத்தினுடைய பார்வையின் பேரில் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே பொட்டணம் கிராமம், சர்வே எண் 176ல் அமைந்துள்ள 6 கற்குவாரிகள் பற்றிய ஒரு பார்வை. இதற்கு முன் பேசிய சக தோழமை நண்பர்கள் கல்குவாரியானது 25 ஆண்டுகள் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதனால எந்த பிரச்சனையும் இல்லை, எந்த தொந்தரவும் இல்லை என்றெல்லாம் பேசினார்கள். ஒரு சிலர் இதற்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்தார்கள், இப்படி இருக்கையில கடந்த சில தினங்களுக்கு முன்பு, மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இணைய தளத்திலே பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் கண்டதை தொடர்ந்து, நான் அந்த பகுதியிலே சென்று ஆய்வு மேற்கொண்டதிலே, எனக்கு கிடைத்த தகவலைதான் நான் இந்த கூட்டத்திலே பகிர இருக்கிறேன். அதில் இந்த அமைய இருக்கின்ற இரண்டு குவாரிகளின் நிலைபாட்டினை பற்றி இரண்டு வகைகளாக வகைபடுத்தி காட்ட வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருக்கிறேன். ஒன்று சமூகத்தின் பார்வையில் இத்திட்டத்தின் செயல்பாடு என்ன, மற்றொன்று சட்டத்தின் பார்வையில் இந்த சுரங்கம் அமைவதை பற்றி இரண்டு வகைகளாக பிரித்து சொல்லவேண்டிய கடமைப்படுகிறேன். ஒன்று சமூகத்தின் பார்வையில், இத்திட்டம் 25 ஆண்டுகாளமாக நல்லா நடந்து கொண்டுள்ளது என்று சொன்னார்கள். இது முழுக்க முழுக்க அப்பட்டமான பொய். அப்படியென்றால் அந்த இடத்திலே நான் சென்று கண்ட பொழுது அந்த குவாரி அமைந்திருக்கக்கூடிய கிராமம், பொட்டணம், அது அமைந்திருக்கின்ற இடம் சர்வே எண். 176 அதனை சுற்றி 300 மீட்டர் தொலைவிலே வீடுகள் இல்லை என்று காட்டினார்கள். இது எந்த அளவுக்கு உண்மை. இதற்கு முன்னால் பேசிய தோழர்கள் இது உண்மை என நிரூபிக்க முடியுமா? இன்னும் குறிப்பா எடுத்துக்குங்க, வருவாய் துறை ஆவணங்களான (FMB யில்) 176 ஒட்டி 50 அடி தூரத்திலே இருக்கக் கூடிய 181 சர்வே எண்ணில் இரண்டு வீடுகள் அடையாளம் விடப்பட்டு இருக்கிறது. மேலும்,

300 மீட்டர் சுற்றளவில் 76 வீடுகளுக்கு மேற்பட்ட வீடுகள் அமைந்திருக்கின்றன. மேலும், 26 நீரோடைகள் ஏரிகள் வெள்ளவாரிகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இத எல்லாம் நா சொல்லலை உங்க வருவாய் துறை ஆவணம் சொல்லுது. அங்க போய் பார்த்தா அந்த 26 நீர் நிலைகளும் இல்லை. எதற்காக அழிக்கப்பட்டிருக்கிறது. இந்த குவாரியிலிருந்து வாகனங்கள் கற்களை எடுத்து செல்வதற்காக போடப்பட்ட சாலைகள் போடுவதற்காக இந்த நீர் நிலைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நீர்நிலைகள் இன்றைக்கு உருவாக்கப்பட்டவையா, இல்லை நமது மூதாதையர்கள் காலத்திலிருந்து முன்னோர்கள் காலத்திலிருந்து உருவானவை. இந்த ஓடை வெள்ளவாரிகள், ஏரிகள், எதற்காக அரசாங்கத்தால் வகைபாடு செய்யப்பட்டிருந்தன. அதை எல்லாம் எதிர்காலத்திலே மனிதர்களுக்கு, சமூகத்திற்கு பொருளாதாரத்திற்கு, உழவு தொழிலுக்கு தேவை என்று ஏற்படுத்தப்பட்டவை, அவைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. நீர்நிலைகள் அழிக்கப்பட்டால் என்ன நடக்கும், அதனுடைய பின் விளைவுகள் என்ன என்று அண்மையிலே வெளியிடப்பட்டுள்ள சுப்ரீம் கோர்ட் ஆர்டர் (Supreme Court Order) சொல்லுது நீர் நிலை அழிக்கப்பட்டால் அதை மீட்டெடுக்க வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. அப்படியிருக்கையிலே, இந்த குவாரிகள் அமைந்து அழிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த இடத்திலே கட்டாயம் சுட்டிகாட்ட வேண்டும்.

இரண்டு, அந்த வெடிபொருட்கள் வைத்து வெடி வெடித்தபோது, நாங்கள் கண்ட காட்சி, வெடி வெடிச்சா எந்த பிரச்சனையும் இல்லை அப்படிங்கறாங்க, ஆனால் ஹெக்டர் அளவு கோலில் 3.5(Point)க்கு ரிக்டர் அளவுக்கு மேல் அதிகமாக வெடிவைக்கும் போது அங்கிருக்கும் வீடுகள், பாத்திரம், பண்டங்கள் அதிர்கின்றன. இது நான் கண்கூடாக கண்ட காட்சி, யாரோ ஒரு சிலர் வந்து எங்களுக்கு நல்லாயிருக்கு (குவாரியிருக்கிறதால) அப்படினு நினைக்க வேண்டாம். உங்களுக்கு இன்னும் சந்தேகம் இருந்தால் எக்ஸ்போர்ட்

நிபுணர்துவம் வாய்ந்த நிபுணர்களை அழைத்து சென்று அங்கு பாருங்கள். உங்களுக்கு தெரியும், இதெல்லாம் முழுக்க முழுக்க பொய். இன்னும் நிறைய விசயங்கள் எங்களால் சொல்ல முடியும். ஒரு சூழலியலை காப்பதென்பது ஒரு தனி மனிதனின் அத்யாவசிய கடமையும் கூட இந்திய அரசியலமைப்பு சட்டத்திலே, ஆர்டிகல் 14–ல் தனிமனிதனின் ஒவ்வொரு உரிமையும் சொல்லப்பட்டிருக்கிறது. சூழலியலை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உள்ளது. எனவே, அந்த சூழலியலிலே நான் நடக்க கூடிய விசயங்களை நான் எடுத்து சொல்வதற்கு கடமைப்பட்டிருகிறேன். அடுத்து இந்த மலையின் அடிவாரத்திலேயே செல்லியம்மன் கோயில் என்றொரு வழிபாட்டு தலம் உள்ளது. அதைபற்றி சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கையில் அந்த கோயிலினுடைய நிலைபாடு சொல்லப்படவே இல்லை. அடுத்து இந்த குவாரி அமைந்திருக்கக் கூடிய மலை இரண்டு கிராமங்களுக்கு எல்லையிலே அமைந்து இருக்கின்ற ஒரு மலை. அடுத்து பச்சுடையாம்பட்டி என்ற கிராமம் உள்ளது. அதிலே புல எண்.3 அதை ஒட்டி இருக்கக் கூடிய இடம் புல எண். 3, அந்த புல எண். 3–லிலே வாழ்வாதாரத்திற்கான அனைத்து கட்டமைப்புகளையும் கொண்ட விவசாய நிலங்கள் அந்த 3–யை சுற்றி இருக்கக் கூடிய சுற்று பகுதியிலே இருக்கின்றன. ஆனால் அங்க இருக்கக் கூடிய உழவு தொழிலினுடைய நிலைபாடு என்ன வென்று சென்று பார்தோமானால் இந்த மலையிலே கிடைக்கக் கூடிய கற்களின் தாக்கம், அந்த பவுடர், புழுதி அனைத்துமே அந்த விவசாய நிலங்களிலே படிந்து கிடக்கின்றன. அங்குள்ள நீர்நிலைகளில் உள்ள தண்ணீர் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகிறது. இது எல்லாம் ஆணையத்திலே உள்ள நிலைபாட்டிலே சொல்லப்படவில்லை. இன்றைக்கு உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற நிலைபாட்டிலே உழவானது உலகத்திலேயே முதன்மையான ஒரு தொழிலாக உள்ளது. இந்த

குவாரியை சுற்றியுள்ள அனைத்து நிலங்களிலும் உழவு தொழிலை மட்டுமே நம்பி வாழக்கூடிய ஒரு பகுதி, உழவு தொழிலுக்கு எதிரான இத்திட்டத்தினை எதிர்க்க வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருப்பதால்தான் நாங்கள் இந்த நிலைபாட்டை சுட்டி காட்டுகின்றோம். அடுத்து, ஏற்கனனே இங்கு அமைந்துள்ள குவாரிகளும் சரி, இனி அமையவுள்ள குவாரிகளும் சரி எத்தனை பணியாளர்கள் வேலை செய்கிறார்கள் தொழிலாளர் நல பாதுகாப்பு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறதா? உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் அது முழுக்க முழுக்க கேள்விக்குறி. 10 நபர்களுக்கு மேல் குவாரிகளில் வேலை செய்தால் அங்கு கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று நான் அங்கு சென்று பார்த்த போது, பதிவு செய்யப்படவில்லை. இந்த உழவு தொழிலின் கூடுதலாக கால்நடை வளர்ப்பு அங்கு முழுக்க முழுக்க பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கு மனிதர்களின் வாழ்வாதாரமானது கால்நடையை மையப்படுத்தி இருக்கிறது. அதே நேரத்திலே அங்கு ஏராளமான விசயங்களை கோடிட்டு காட்ட முடியும். இங்கு நேரம் கருதி வாய்ப்புக்கு நன்றி கூறி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் என்பது உழவு தொழிலுக்கு எதிரான எந்தவொரு திட்டமாக இருந்தாலும், சூழலியல் போராளி என்ற முறையிலும், வழக்கறிஞர் என்ற முறையிலும் இந்த திட்டம் இருக்கக் கூடாது. முழுமையாக செயல்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஏற்கனவே இந்த குவாரிகள் சரியாக அமைக்கப்படவில்லை. அங்கு எடுத்துச் செல்லும் கற்கள் கூட பாதுகாப்பாக எடுத்து செல்லப்படுவது இல்லை என்பதை கூறிக்கொண்டு, இந்த குவாரியை முழுக்க முழுக்க விவசாயத்திற்கு எதிராக அமைய இருப்பதால் இந்த குவாரி அமைவது அவசியமில்லை என்று தெரிவித்துக் கொண்டு, இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

24.திரு. குணசேகரன் (Continue) ஜேடர்பாளையம்.

நாங்களும் இந்த மாதிரி 2 வக்கீல்களை கூட்டிட்டு வந்து, நம்ம பேசுனும்னா பேசலாங்க, இது வந்து பொதுமக்கள் கருத்து கணிப்பு சுருக்கமா, அங்க நடக்க கூடிய உண்மைய என்னான்னு தெள்ள, தெளிவா சொன்னா பரவாயில்லை. இந்த மாரி நீரோடைய மூடிட்டான், அத மூடிட்டா, இத மூடிட்டான்னு, அப்படினு, எப்ப இருந்து எப்ப நடந்தது. எத பேச வேண்டிய நேரத்துல எத பேசுறது. அதனால நல்ல விவசாயங்களுக்கு முக்கியத்துவம் குடுத்து நல்லதா பேசுனா நல்லா இருக்குங்மா.

25.திரு. மதியழகன் அவர்கள், பரமத்தி வேலூர் தாலுக்கா, பொத்தனூர்.

தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளராக இருக்கிறேன். என்னுடைய ஆட்சேபனை வந்து இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கோட்பாடு 51A-இன் படி இந்திய குடிமகனாக இருக்கக் கூடிய ஒவ்வொருவருக்கும் அடிப்படைக் கடமை உள்ளது. சுற்றுச் சூழலை பாதுகாக்க, இயற்கையை பாதுகாக்க கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் நான், இந்த ஆட்சேபனை தெரிவிக்கின்றேன். முதலில் குவாரி அமைப்பதற்கு சுற்றுச் சூழலுக்கு எதிரானது இயற்கை சேதம் செய்கிறது. அதற்கு அடுத்தது, நீங்கள் அனுமதி கொடுத்தாலும், அனுமதிகளை பின்பற்றி எந்த குவாரியும் நடப்பதில்லை. இதுவரை, மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கியுள்ள ஏதாவது ஒரு குவாரி நீங்கள் சட்டப்படி செயல்படுகிறது என சொன்னால், அது சட்டப்படி செயல்படவில்லை என்பதை நிரூபிப்பதற்கு, நான் ஆதாரங்களை ஆய்வு செய்து எடுத்து தருகிறேன். இதில் ஒரே ஒரு உதாரணம், இந்த குவாரிகள் வெட்டி எடுக்கக் கூடிய கனிமங்களுக்கு பர்மீட் போடுவது ஒரு விதமாக இருக்கிறது. அதனுடைய பில் வேற விதமாக இருக்கிறது. ஜி.எஸ்.டி–ல் சலுகை பெறுவதற்காக பில்களை அதிகமாக கொடுத்து அவர்கள் அரசாங்கத்திலிருந்து பணத்தை எடுக்கிறார்கள். இதைபோல நிபந்தனைகள், அரசு விதிக்கக்கூடிய நிபந்தனைகளை சட்டத்திலுள்ள விதிமுறைகளை எந்த

குவாரிகளும் பின்பற்றுவதில்லை. அதே போல குவாரி அமைத்து முடித்தவுடன் அந்த ஆண்டு முடிவடைந்த பிறகு, அதை மீண்டும் மண் நிரவி விவசாயத்திற்கு பயனுள்ளதாக செய்ய வேண்டும். இதுவரை வழங்கப்பட்டுள்ள எந்த குவாரிகளும், அந்த குவாரிகளை மூடி விவசாயத்திற்கு பயனுள்ளதாக செய்யவில்லை. இதேபோல மாவட்ட ஆட்சியர் விதிக்கக்கூடிய நிபந்தனைகளையும், சட்டத்திலுள்ள நிபந்தனைகளையும் உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற விதிகளையும் வழிகாட்டுதலையும், எதையுமே பின்பற்றாமல் குவாரி வாங்குவதற்கு முன்பு எந்த நிபந்தனையையும், ஏற்க தயாராக இருக்கிறோம் என்று அனுமதி கேட்கிறார்கள். மாவட்ட ஆட்சியரும், அனுமதி வழங்கும் போது, ஏதாவது நிபந்தனையை மீறினால் குவாரி உரிமத்தை ரத்து செய்துவிடுவோம் என்று சொல்லி அனுமதி கொடுக்கிறீர்கள். ஆனால் நடைமுறையில் குவாரி உரிமம், பெற்ற பிறகு அவர்கள் எல்லா விதிகளையும் மீறுகிறார்கள். அதை தடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர் கீழுள்ள அந்த டாஸ்க்போர்ஸ் என்ற அரசாணையை அதாவது டாஸ்க்போர்ஸ் கமிட்டி மாவட்ட அளவிலான கமிட்டி வட்ட அளவிலான கமிட்டி அந்த கமிட்டியில் இருக்கக் கூடிய உறுப்பினர்கள் யாரும் அந்த குற்றங்களை தடுப்பதில்லை. ஆகையால் முதலில் அனுமதி தருவதற்கு முன்பே அவர்கள் சரியான நபர்களா, குவாரி ஏற்கனவே பெற்ற உரிமத்தினை சரியாக பின்பற்றுகிறார்களா, என்பதை ஆராய்ந்து தரவேண்டும். ஆனால் சுற்றுச் சூழலை பொருத்தவரை எந்தவொரு அனுமதி கொடுத்தாலும், அது அரசுக்கு பயனுள்ளதாக இருந்தாலும் மக்களுக்கு பயனுள்ளதாக இருந்தாலும், இயற்கைக்கு கேடானது என்பதால் இந்த குவாரி அமைப்பதை, நான் கடுமையாக ஆட்சேபனை செய்கிறேன்.

26.திரு. விஜயன், சமூக ஆர்வலர் (நுஞ்சை புகளூர்)

இயற்கை வளங்களை சூறையாடபடுகிறது, காடு, மலை, மண், மணல்–ன்னு எக்கச்சக்கமா கொள்ளையடிக்கப்பட்டிருக்கு, இதோட விளைவு வந்து

பார்த்தீங்கனா, காற்று மாசு, நிலமாசு, நீர்மாசு என எல்லாமே ஏற்கனவே குவாரி அமைஞ்சதநாலதான் இந்த மாசு எல்லாம் அடைந்திருக்கு, இது அமைஞ்சாலும், மாசு பிரச்சனை வரும், மழை பொழிவு இல்லாம போகும், இப்ப இந்த கொரோனான்னு வந்ததுக்கு அப்புறம்தான் இது போன்ற மழைபொழிவே அதிகமாயிருக்கு. மழைபொழிவு காரணமே, வந்த மாசு குறைஞ்சதனாலதான் மழைபெய்யும். குவாரி வரக்கூடாதுன்னு பொதுமக்கள் சார்பாகவும், சமூக ஆர்வலர்கள் சார்பாகவும் எதிர்ப்பு தெரிவிக்கிறோம்.

27. திரு. இளையரசன் (Continue), பச்சுடையாம்பட்டி

குவாரி இன்னைக்கு புதுசா வரவில்லை 25 வருசமா நடந்துகிட்டு இருக்கு 1997–ல் இருந்து நடந்துட்டு இருக்கு. "குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" நிறைகளை அதிகமாக காட்டனும் அதற்காகத்தான் சொல்றேன்.

28. திரு. பூசன், மாணிக்கம்பாளையம், சட்டவிரோத கல்குவாரிகள் எதிர்ப்பு இயக்கம்.

கல்குவாரிகள் அமையறதால அந்த பகுதி விவசாயம், முழுமையா அழிக்கப்படுது. ஆடு, மாடு வைத்திருக்க முடியாது. குடிக்கறதுக்கே குடிநீர் கிடைக்காது. இதனால இந்த கல்குவாரி அமையறத கடுமையா எதிர்க்கிறோம். அதனால அந்த பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதாக சொல்கிறார்கள். ஆனால் அந்த பகுதி மக்கள் யாருக்கும் வேலை கொடுக்கப்படாது, விவசாயம் முற்றிலும் அழிக்கப்படும். அந்த கிராமம் பாலைவனமாகிவிடும், விவசாய தொழிலாளர்கள் அந்த கிராமத்தை விட்டு வெளியூருக்கு அகதிகளாக புலம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஒட்டுமொத்தமாக விவசாயம் அழிந்துவிடும் விவசாய தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள். விவசாயம் அழிவதால் விவசாயிகள் வேலையிழப்பார்கள். கிட்டதட்ட 500 பொதுமக்கள் வேலையிழந்து அந்த பகுதி பாலைவனமாக மாறும், அதனால் இந்த குவாரி அமையக்கூடாது என இந்த நேரத்திலே

வேண்டிக் கொள்கிறேன். அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே, இந்த குவாரி அமைப்பதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

29. திரு. சதீஷ், பொட்டணம்.

நான் கல்குவாரி பக்கத்துல ஒருரோடுதான் குறுக்க பக்கத்துல எங்க காடுதா இருக்கு. அதாவது கல்குவாரி விடுவதாலையோ, இல்ல மத்தவங்க சொல்றமாதிரி வெடிவைக்கரதாலையோ எந்த ஒரு பிரச்சனையும் கிடையாது. கிணத்துல தண்ணி இல்ல, அது இல்லனு எங்க கிணத்துள முக்கால் கிணறு தண்ணி இருக்கு. நாங்க காட்டுல கிழங்கு குச்சிதான் போட்டு இருக்கோம். எந்தவொரு பிரச்சனையும் இல்ல கல்குவாரி நல்லா இயங்கலாம். எங்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்குது. இந்த ஊர்லதான் நாங்களும் இருக்கோம். என் மூலமா 10 பேருக்கு வேலை தரேன். எந்த பிரச்சனையும் இல்ல, கல்குவாரி நல்ல முறையில் இயங்கிட்டு இருக்கு.

30.திரு. சுந்தர்ராஜ், சாலையூர்

நாங்க கல் உடைக்குறதுல வேலை செஞ்சுட்டு இருக்கேன். குவாரி குடுத்தீங்கனா எங்களுக்கு கொஞ்சம் ஹெல்பா (Help) இருக்கும். வேற எந்த வேலையும் தெரியாது. ஆட்டுக்கல், அம்மிக்கல் வேலைதான் பார்த்துட்டு இருக்கோம். குவாரி குடுத்தீங்கனா ஹெல்பா இருக்கும்.

31. திரு. வாசு, சேந்தமங்கலம்

இந்த கிரஷர்தான் எங்களுக்கு வாழ்வாதாரமே, எங்க பசங்க நிறைபேர் படிச்சு வேலை இல்லாம இருக்காங்க. இந்த கிரஷர்தான் எங்களுக்கு வேலை தருது. படிச்ச இளைஞர்களுக்கு வேலை அதிகமாக குடுக்கிறதால இதுக்கு அனுமதி தரலாம் கிரஷர் இருக்கிறதால எங்களுக்கு பரவால.

32. திரு. சசிக்குமார், கிரசர் வேலை செய்பவர்.

நான் கிரஷர்லதான் வேலை பார்க்கிறேன். அவங்க சொல்றமாதிரி இரண்டு, மூன்றுவீடு விரிசல் விடுகின்றது. அப்படின்னா அது கன்ஸ்ட்ரக்சன் பிராபலமா இருக்கலாம். ஆனா கிரஷர் பக்கத்திலே இருக்கிற வீட்டுகாரர்தான் இவரு, இப்ப வந்தீங்கனா, இவரு வீட்டப்பார்க்கலாம். அவரு அட்ட போட்ட வீடுதான் வச்சியிருக்காரு, ஏதாவது கல் விழுந்திருக்கா, ஏதாவது விரிசல் விழுந்திருக்கா, ஆனா அவரும் தோட்டம் தான் வெச்சிருக்காரு. குச்சிகிழங்கு போட்டு இருக்காரு, ஆனா, அதுல ஏதாவது புகை படிஞ்சியிருக்கானு நீங்க நேர்லையே வந்து பார்க்கலாம்.

33.திரு. கந்தசாமி – ஊர்கவுண்டர், சாலையூர் கிராமம்.

இந்த கல்குவாரி வந்து 25 ஆண்டுகளாக நடந்துகிட்டு இருக்குதுங்க. இது என்னான்னா வேட்டு வைக்கரதுல கொஞ்சம் சீரா வச்சிகங்க அப்படின்னு சொன்னா, அத கரெக்ட் பண்ணி வச்சுக்குறேன்னு சொல்லிட்டாங்க. ரோடு எல்லா வண்டி வாகன போக்குவரத்து அதிகமா இருக்குறதால தண்ணீர் தெளிச்சு ஓட்டிக்கிட்டு இருக்கிறாங்க. தார்சாலை அமைச்சு பண்ணாங்கனா, மத்தபடி எந்த பிரச்சனையும் இல்லை. உங்க அனுமதி எப்படியோ அப்படி வழங்கி எங்களுக்கு எந்தவொரு கோட்பாடும் இல்லை. நன்றி.

34. **திரு. முகிலன் அவர்கள்,** ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம்

முதலில் மாவட்ட நிர்வாகத்திற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நாங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை முழுமையாக இணையத்தில் ஏற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வந்தோம். கடந்த 7–10லிருந்து இணையத்துல சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை இணையத்துல முழுமையாக ஏற்றப்படுகிறது. ஆனால் அறிக்கையில் இணைப்புகள் கொடுப்பதில்லை. ஆனால் இந்த குவாரிக்கு மட்டும் அனைக்சர் மட்டும் 400 பக்கம், ஆனா அதுல போய் பார்த்தா 250 பக்கம்தான் இருக்கு, 400

பக்கம் இல்ல, இதனால அதுல குறிப்பா ஜியோ எக்ஸ்பிலேனேசன் அண்டு மைனிங் சொலியூசன் என்ற கம்பெனியினுடைய அறிக்கையில் மட்டும் தான் இப்படி இருக்குது. நேற்று முன்தினம் தூத்துக்குடி மாவட்டத்தில் நடந்த கருத்து கேட்பு கூட்டத்துல, முழுக்க திட்ட அறிக்கையை முழுக்க அந்த அனைக்சரையும் இணையத்துல மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஏத்தியிருந்தாங்க. ஆனால் இந்த ஜியோ எக்ஸ்பிலேனேசன் நிறுவனம் அப்படி ஏத்தறது இல்ல. வருங்காலத்துல மாசு கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் உங்க பெரிய அதிகாரிகளிடம் சொல்லி அத முறைபடுத்தனும்னு கேட்டுக்கிறேன். அதுமட்டுமல்லாமல் EIA அறிக்கையை முழுமையாக தமிழ்ப்படுத்தி இணையத்தில் ஏற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தோம். இது தொடர்பாக முதல்வரிடமும், சுற்றுச் சூழல் அமைச்சரிடமும், தொழில்துறை அமைச்சரிடமும், தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சரிடமும் நாங்கள் கோரிக்கை வைத்திருந்தோம். இதன் அடிப்படையில் இக்கூட்டத்திற்கான சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை. தமிழில் மாவட்ட நிர்வாகம் வெளியிட்டு இருக்கிறது. அதற்காக மாவட்ட நிர்வாகத்திற்கு எங்களது நன்றியை தெரிவித்து கொள்கிறோம். ஆனால் இந்த தமிழில் வெளியிட்டது நேத்துதான் எங்களுக்கு கிடைத்தது. இது நேத்து இரவு கெடச்சு நாங்க ரெபர் பண்ணி வந்து பேச முடியாது. அதனால வருங்காலத்தில் தமிழில் இருக்கக்கூடிய அறிக்கையை மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் ஏற்றப்பட வேண்டும். அப்படி ஏத்திட்டா நாங்க டவுன்லோடு பண்ணிப்போம். அந்த வேலைய செய்யனும்னு சொல்லி அமைச்சர்க்கும், உயர் அதிகாரிகளுக்கும் பரிந்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இன்னொரு கோரிக்கை கடந்த 21.10.2021 அன்று மரப்புரையில் கருத்து கேட்பு கூட்டத்தில் நேரடியாக அந்த குவாரி நிறுவனத்தினரும், மரப்புரை ஊராட்சி மன்ற தலைவரும் நீ உயிரோட வெளியே செல்ல முடியாது என்று கோட்டாட்சியரிமும் மாசு கட்டுப்பாடு வாரிய பொறியாளர் முன்னாடியே பேசுன்ரு. அந்த முழு வீடியோ கையில சீடியா

இருக்கு தரோம். அதுக்கு எந்த நடவடிக்கையும் இல்ல அதற்கு நடவடிக்கை எடுக்கனும்.

இந்த குவாரியினுடைய பிரச்சனையை மட்டும் பேசுமாறு மாவட்ட ஆடசியர் கேட்டுக் கொண்டார்.

முதலில் இந்த குவாரி சட்டப்படி இயங்குவதற்கு தகுதி இல்லாத குவாரி காரணம். VAO வந்து சான்று குடுத்திருக்காரு, என்னென்னா 300 மீட்டர் தூரத்துக்குள்ள வீடுகள் இல்லைன்னு சொல்லி, EIA அறிக்கையினுடைய 492வது பக்கத்துல, குடுத்து இருக்காரு. அதே மாதிரி வட்டாட்சியர் வந்து 86–A–ல் 300 மீட்டர் தூரத்துல பக்கம் – 36A ல் ஒருவீடுகள் கூட இல்லைங்கிறாங்க. 2010–ல் அந்த உள்ளூர் VAO குடுத்த அடங்கல், அதாவது குவாரியை சுற்றி கிட்ட தட்ட 46 இனங்கள்ல ஓடைகள், பாதைகள், வெள்ளவாரிகள் இருந்தது. நமக்கெல்லாம் தெரியும். 75 வருசமா நீரோடையில குடியிருந்துவங்களுக்கு வீடு போயிருச்சி, இடத்த காலிபண்ண சொல்றாங்க. இப்போ இது நா கொடுத்த ரிப்போர்ட் இல்ல அந்த கிராமத்தினுடைய நிர்வாக அலுவலர் 2010ல் குடுத்த சான்று இத பாத்துக்குங்க. 176ல இந்த குவாரி அமையுது. இந்த குவாரியை சுற்றி இருக்கக்கூடிய மற்ற விவரங்கள் இவை. அதாவது நீர் நிலைகள் பக்கத்துல இருந்த 50 மீட்டர் தூரத்துக்குள்ள குவாரி அமையக்கூடாதுங்கறது சட்டம். ஆனா இந்த VAO வும் தாசில்தாரும் பொய்யான ரெக்கார்ட கொடுத்திருக்காங்க. இதுக்கு சான்று இதுதான். அதாவது ஒரு பொய்யான சான்ற கொடுத்த அரசு நிலம் தண்டிகரடு என்று சொல்லக்கூடிய மலைபகுதி அதை தனிபவர் கொள்ளையடிக்க இருப்பது, எந்த விதத்தில் நியாயம். நீங்க தனிநபருக்கு கூட கொடுக்கலாம். எப்படி கொடுக்கலாம் மொழி போராட்டத்துல சிறைக்கு போனவங்களுக்கு கொடுக்கலாம். அதேபோல அடுத்ததாக வீடு, வீட்டை பொறுத்த வரையில் இந்த 3 அறிக்கை அங்க வந்து பவர் பாயிண்ட் பிரசன்டேசன் குடுத்தாங்க. EIA சுருக்கறிக்கை இருக்கு. EIA அறிக்கை இருக்கு. 3--லையும் 3

விதமா இருக்கு, VAO சான்றிதழ்ல வீடு இல்லைங்கிறது. Salient Feature – அப்படிங்கற EIA அறிக்கையில 397–A ல் வீடு இல்லைன்னு சொல்லியிருக்கு. திட்ட அடங்கல்ல வீடு இருக்குதுன்னு குடுத்திருக்காங்க. இதோ FMB இருக்கு. FMB பாத்திங்கனா நேத்து எடுத்தது. FMB–ல் 181–ல் வீடு இருக்குதுன்னு காட்டப்பட்டிருக்குது. எதை நம்புவது, எது ரெக்கார்டு, அதாவது அரசினுடைய ஆவணம் வீடு இருக்குதுன்னு சொல்லுது. VAO–வும், தாசில்தாரும் வீடு இல்லைங்கறாங்க. எது உண்மை, ரெக்கார்டு உண்மையா, இல்ல அவர் கையெழுத்து போட்டு குடுத்தது உண்மையா. இத நீங்க நடவடிக்கை எடுக்கனுமா ?

நாங்க போய் பார்த்தோம். 150 வீடுகள் இருக்குது. குவாரி அமையர இடத்துல இருந்து 300 மீட்டர் தூரத்துக்குள்ள 1000 அடி சுற்றளவுல வீடுகள் இருக்கக் கூடாதுங்கறது சட்டம். ஆனால் கிட்ட தட்ட 150 வீடுகள் 300 மீட்டர் தூரத்தில் 1000 அடி சுற்றளவுக்குள்ள இருக்குது. நான் ரெக்கார்டோட சொல்றேன்.

அடுத்து புகைவண்டி நிலையம். இந்த சுருக்க அறிக்கையில் புகைவண்டி பாதை 6 கி.மீட்டர் தூரத்துல களங்காணியில இருக்குதுன்னு சொல்றாங்க. ஆனா EIA அறிக்கையில இங்க காமிச்ச பவர் பாய்ண்ட் பிரசர்டேசன் காமிச்சதுல களங்காணியில இரயில்வே ஸ்டேசன் இருக்குதுங்கறாங்க, இல்லாத இரயில்வே ஸ்டேசன் இருக்கிறதாகாட்டி, பொய்யான சான்றிதழை குடுத்திருக்கறாங்க அடுத்தாக வெடி வெக்கற நேரத்த பார்த்தா பவர் பாய்ண்ட் பிரசர்டேசன்ல 1 முதல் 2–தா வெடி வெடிக்குற நேரம்னு சொன்னாங்க நடைமுறையில, இரவு முழுக்க வெடி வெடிக்கறாங்க. இது பத்திரிக்கை செய்தியா வந்து அதிகாரிகள் போய் ஆய்வு பண்ணியிருக்காங்க. அப்போ சட்டம் எங்கே ? சட்டபடி செயல்பாடு எங்கே ?

நாங்க கேக்குறோம் மாலை 5 மணிக்கு மேல குவாரி இயங்க கூடாது, அப்படினு தெரிவிச்சு இருக்காங்க. ஆனா ராத்திரி பூரா இயங்கிட்டு இருக்கு. அருகிலுள்ள நீர்நிலையை பொருத்தவரை. இங்க வந்த, கூட்டத்துல ஒருத்தர்கிட்டயாவது அறிக்கை இருக்கா மேடம். அறிக்கையை வச்சி நா பேசுறேன். காப்புக்காடு என்பது, காப்புக்காடு இருக்குதா அப்படினு சொல்லியிருக்காங்க அறிக்கையில EIA அறிக்கையில ரிசர்வ் பாரஸ்ட் சட்டம் 16–ல் பாதுகாக்கப்பட்ட வனபகுதி 5 கிலோ மீட்டர் சுற்றலளவில் இல்லைன்னு சொல்லியிருக்காங்க, ஆனால் இதுக்கு வன கட்டுப்பாட்டு அலுவலக சான்று வேண்டுங்கறாங்க. ஆனால் இந்த ரிப்போர்ட்டுல வன அலுவலருடைய சான்று கிடையாது. ஏன் இப்படி தடுக்கறாங்கனா, பேசக்கூடிய விசயம் சியாவிடம் (SEIAA) போவது. ஒரு விஷயம் தவறா இருந்தாலும், அனுமதி கொடுக்க மாட்டாங்க, உண்மை வெளிவரக்கூடாதுனுதான்.

அதே போல பொட்டணம் 1 கி.மீ தூரம், ஆனால் திட்ட அறிக்கையில் 1.50 கி.மீட்டர் எனவும் லொக்கேசன் மேப்பில் 1.2 கிமீ எனவும் தவறான தகவல் செர்ல்லியிருக்காங்க. மேலும், நிலப்பகுதி பாருங்க 84 விழுக்காடு. விவசாய நிலமா காட்டப்பட்டு இருக்குது. அதேபோல இங்க வந்து திட்ட அறிக்கையிலே, இந்த மாதிரியான பல்வேறு தவறுகள் இருக்குது. தயவு செய்து மாவட்ட நிர்வாகத்துக்கு தெளிவா சொல்றேன். மாசு கட்டுப்பாட்டு பொறியாளர்களுக்கு கருத்து கேட்பு கூட்டங்கள் அறிக்கையின் மூலம் பேசுறேன். அறிக்கை வைத்து பேசுறேன், பொதுவா நல்லது கெட்டதுன்னு பேசுனாங்க நான் அறிக்கையின் அடிப்படையில்தான் பேசுறேன். உண்மையை சொல்லுறேன்.

35.சாக்ரடீஸ் (Continue)

மறுபடியும் பேசுரதுக்கு கலெக்டர் அம்மா மன்னிச்சுகோங்க, அவரு சொல்றது பூராமே எங்கயோ, எதை எதையோ 2010ங்கறாரு, 2010–லிருந்து அவரு எங்கமா போனாரு, எங்கிட்ட 10 மாடு இருக்குது, ஏ வீட்டுக்கிட்ட வந்து

இன்னைக்கு நிக்க சொல்லுங்க அவர என் வீட்டுகிட்ட வந்து நிக்க சொல்லுங்க, நா அருகாமைலதா இருக்கிறேன். இவரு எங்கையோ இருந்து வந்துட்டாக.

இதனை தொடர்ந்து வெளியூர் நபர்கள் பேசுவதற்கு அவையில் உள்ள பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனை தொடர்ந்து ஏற்கனவே, பேசியவர்கள் மேலும் ஏதேனும கருத்து தெரிவிக்க விரும்பினால் எழுத்து பூர்வமாக தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டார். மேலும், இதுவரை பேசாமல் உள்ள உள்ளூர்காரர்கள் எவரேனும் இருந்தால் கருத்து தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து வேறு கருத்துக்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

கூட்டத்தின் முடிவில் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்கள், இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும், நிகழ்வின் போது அளிக்கப்பட்ட மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு: 1. விளக்கக்காட்சி
2. பெறப்பட்ட மனுக்கள்
3. பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு.

19.11.2022

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
நாமக்கல்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாமக்கல்

3/3